In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi
Case No :OS.5/2018
Deposition of P.W.4
****

Name திரு.சுடலைமுத்து

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 05th day of December 2023.

**முதல் விசாரணை :**

நான் கோவில்பட்டி, சீனிவாசநகர், க.எண்.6/400/B4 என்ற முகவரியில் வசிக்கிறேன். நான் வியாபாரம் செய்கிறேன். வாதி சீனிவாசனை தெரியும். வாதி சீனிவாசன் என்னிடம் 2007ம் ஆண்டில் பணம் வாங்கியிருந்தார். என்னிடம் பணம் வாங்கியதற்காக நான் சீனிவாசனிடம் இடம் எழுதி வாங்கினேன். சீனிவாசனிடம் இருந்து என் சகலபாடி சண்முகையா பெயருக்கு பவரும், சண்முகையா என் பெயருக்கு கிரைய ஒப்பந்தமும் ஏற்படுத்திக் கொடுத்தார். சீனிவாசன் சண்முகையா பெயருக்கு ஏற்படுத்திக் கொடுத்த பவர் பத்திர நகல் தான் வா.சா.ஆ.11 ஆகும். சண்முகையா என் பெயருக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஒப்பந்த நகல் தான் வா.சா.ஆ.12 ஆகும். சீனிவாசன் என்னிடம் ரூ.3 இலட்சம் வாங்கினார். அந்த பணத்தை 2008ம் ஆண்டு சீனிவாசன் என்னிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார். பணத்தை திருப்பிக் கொடுத்த பிறகு பவர் பத்திரத்தையும், கிரைய ஒப்பந்தத்தையும் ரத்து செய்து நான் சீனிவாசனிடம் கொடுத்துவிட்டேன். பவர் பத்திரத்தை ரத்து செய்து ஏற்படுத்திய ஆவணத்தின் நகல் தான் வா.சா.ஆ.13 ஆகும். கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து ஏற்படுத்திய ஆவணத்தின் நகல் தான் வா.சா.ஆ.14 ஆகும்.

**குறுக்கு விசாரணை 2,3 பிரதிவாதிகள் தரப்பில்** -

வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்ய என்னிடம் லைசென்ஸ் உள்ளது. அந்த லைசென்ஸ்-ஐ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் லைசென்ஸ் பெற்றிருந்தால் யார் யாரிடம் எவ்வளவு பணம் கொடுத்தேன், எவ்வளவு வட்டி வாங்கினேன் என்ற விபரங்களை ஆண்டுதோறும் அதிகாரிக்கு கணக்கு கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். கணக்கு தாக்கல் செய்து அதற்குரிய வருமான வரியையும் நான் செலுத்த வேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ல் சொத்தை கிரையம் வாங்குவதற்காக தொகை கொடுத்ததாகத்தான் வாசகம் உள்ளது என்றால் சரிதான். சீனிவாசனுக்கு கடன் கொடுத்த விபரம் நான் தாக்கல் செய்த கணக்கில் துலங்காது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ன் அசல் தான் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் ஆகும். வா.சா.ஆ.11 ன் அசல் **பி.வா.சா.ஆ.**1. வா.சா.ஆ.12 ன் அசல் தான் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் ஆகும். வா.சா.ஆ.12 ன் அசல் **பி.வா.சா.ஆ.2**. கிரைய ஒப்பந்த ரத்து ஆவணம் வா.சா.ஆ.14 ன் அசல் ஆவணம் தான் **பி.வா.சா.ஆ.3**. பொது அதிகார ரத்து ஆவணம் வா.சா.ஆ.13 ன் அசல் ஆவணம் தான் **பி.வா.சா.ஆ.4**. வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே சொத்து சம்பந்தமாக என்ன பேசிக்கொண்டார்கள், என்ன ஆவணம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. வாதி சீனிவாசன் பல இடங்களில் தொழில் செய்து கொண்டு அது சம்பந்தமாக பாம்பே மற்றும் வெளியூர்களுக்கு செல்வார் என்றால் சரிதான். வாதி சீனிவாசன் என்னிடம் 2007 ம் ஆண்டில் பணம் வாங்கும் போது தான் பழக்கம் ஆனார். வாதி சீனிவாசனுக்கு பணம் தேவைப்பட்டதால் சொத்தினை கிரையம் செய்ய ஏற்பாடு செய்தார் என்றால் சீனிவாசன் எனக்கு சொத்தினை கிரையம் தருவதற்காக பணம் வாங்கவில்லை. பி.வா.சா.ஆ.1 ல், "தபசில் கண்ட சொத்துக்களை தற்போது விற்பனை செய்வது அவசியமாகிறது. என்னுடைய வியாபார நிமித்தம் நான் அடிக்கடி வெளியூர் செல்ல வேண்டி இருப்பதால் தபசில் சொத்துக்களின் கிரையம் சம்பந்தமான காரியங்களை நானே நேரில் இருந்து கவனித்துக் கொள்ள

இயலாமல் இருப்பதால் பொது அதிகாரம் கொடுத்ததாக" வாசகம் உள்ளது என்றால் சரிதான், பவர் பத்திரம் எழுதி வாங்கினால் எல்லா ஆவணங்களிலும் அது போன்ற வாசகம் வரும். பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுக்க எந்த கைமாற்று தொகையும் பெறவில்லை என்ற வாகசமும் பி.வா.சா.ஆ.1 ல் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆனது கடனுக்காக எழுதிக் கொடுத்தாக நான் சொல்வது பொய் என்றாலும், சொத்தை விற்பனை செய்யத்தான் சீனிவாசன் பி.வாசா.ஆ.1 ஐ எழுதிக் கொடுத்தார் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ல் சொத்தினை கிரையம் செய்து கொடுப்பதற்காக ஒப்பந்தம் பிறப்பிக்கப்பட்டதாகத்தான் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பவரை ரத்து செய்து விடுவார் என்பதால் தான் பி.வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. பி.வா.சா.ஆ.2.ல் ரூ.51,000/-ஐ என்னிடம் இருந்து சண்முகையா பெற்றதாக வாசகம் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக கடன் கொடுத்தால் கடனுறுதி சீட்டு, அடமான பத்திரம் தான் எழுதி வாங்குவார்கள் என்றால் நான் கடன் கொடுத்ததற்கு பவர் பத்திரம் எழுதி வாங்கினேன். பி.வா.சா.ஆ.2 ல் ரூ.3 இலட்சம் கடனாக கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி சீனிவாசனுக்கு ரூ.3 இலட்சம் பி.வா.சா.ஆ.2 தேதியில் நான் கொடுத்ததற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ல் சீனிவாசன் சொத்தை அவரே நேரடியாக நிர்வாகம் செய்ய போவதாக கூறி பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்துள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ல் கிரைய ஒப்பந்தப்படி இரு தரப்பினர்களும் நடந்து கொள்ள இயலாததால் கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி சீனிவாசனுக்கு நான் கொடுத்த ரூ.3 இலட்சத்தை திரும்ப பெற்றுக் கொண்டதாக ஆவணங்களில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சீனிவாசன் என்னிடம் ரூ.3 இலட்சம் திருப்பிக் கொடுத்த விபரம் என்னுடைய கணக்குகளில் துலங்குமா என்றால் கணக்குகளை பார்த்தால் தான் தெரியும். நான் வாதிக்கு கடனாக ரூ.3 இலட்சம் கொடுத்தாகவும், அதற்கு ஆதரவாக பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 ஆவணங்களை

ஏற்படுத்தியதாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக ஒரு நபர் சொத்தினை கிரையம் செய்து கொடுத்தால் சொத்தின் அசல் ஆவணங்களை சொத்தினைகிரையம் பெறுபவரிடம் கொடுப்பார்கள் என்றால் சரிதான். வாதி எனக்கு மிகவும் வேண்டிய நபர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>- 2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்வதாக 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார்.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

Sd/-M.Selvam,
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**தூத்துக்குடி.**